

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.6.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் வனத்துறை களப்பணியாளர்களின் பயன்பாட்டிற்காக 2 கோடியே 42 லட்சம் ரூபாய் செலவிலான 200 மின்சார இருசக்கர வாகனங்கள், 4 கோடியே 63 லட்சம் ரூபாய் செலவிலான 50 பொலிரோ ஜீப்புகள், வன உயிரின அவசர மீட்பு பணிகள் மற்றும் காயமுற்ற வன உயிரினங்களுக்கு அவசர சிகிச்சை அளித்திட 5 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட 35 மீட்பு மற்றும் மறுவாழ்வு வாகனங்கள் (specially designed rescue and rehabilitation vehicles) ஆகியவற்றை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) சுப்ரத் மஹாபத்ர, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ரா. ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நல் ஆளுமை: தேசிய அளவில் கோவை மாவட்டம் – பிச்சானூர் ஊராட்சிக்கு விருது!

# முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் - ஒன்றிய அரசின் விருதினை அமைச்சர் ஐ.பெரியசாமி காண்பித்து வாழ்த்துப் பெற்றார்!

சென்னை, ஜூன் 15-

நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி எனும் கருப்பொருளில் தேசிய அளவில் முதலிடம் பெற்ற கோயம்புத்தூர் மாவட்டம், பிச்சானூர் ஊராட்சிக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட விருதினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (13.6.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி எனும் கருப்பொருளில் தேசிய அளவில் முதலிடம் பெற்றதற்காக கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், பிச்சானூர் ஊராட்சிக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப்பெற்றார்.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 24-ஆம் நாள் தேசிய ஊராட்சிகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைய தினம் தேசிய அளவில் சிறப்பாக செயல்படும் ஊராட்சிகளைப் பெருமைப்படுத்தும் விதமாக, உள்ளூர்மயமாக்கப்பட்ட நீடித்த, நிலைத்த வளர்ச்சி இலக்குகளை மையப்படுத்தி 9 கருப்பொருட்கள் இனங்காணப்பட்டு, அவற்றில் சிறப்பாக செயல்படும் கிராம ஊராட்சிகளுக்கு ஒன்றிய அரசால் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், 2022-23 ஆம் ஆண்டில் தேசிய அளவில் சிறப்பாக செயல்புரிந்த 27 கிராம ஊராட்சிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இதில், தமிழ்நாட்டிற்கு நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி எனும் கருப்பொருளில் தேசிய அளவில் முதலிடம் பெற்ற கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், பிச்சானூர் ஊராட்சிக்கு குடியரசுத் தலைவர் அவர்களால் 17.04.2023 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மரு.தாரேஸ் அஹமது, பிச்சானூர் ஊராட்சி மன்றத் தலைவர் பொ. மருதாசலம், பிச்சானூர் ஊராட்சி செயலர் திருமதி.வ.உமாமகேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## அமித்ஷா பயணத்தின் விளைவு?

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்கள், கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னை வந்து தனது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டுவிட்டுத் திரும்பிப் போய்விட்டார். அவருடைய இந்தப் பயணத்தினால் ஏற்பட்ட விளைவுகள் என்ன ?

**ஒரே கூட்டணியில் இருப்பதாகச் சொல்லப்படும் பா.ஜ.க.- அ.தி.மு.க. இடையிலான முட்டலும், மோதலும் உச்ச கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.**

**ஜெயலலிதா, மோசமான ஊழல் முதல்வர்; ஊழல் வழக்கில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்; அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான், மோசமான நிர்வாகமும், லஞ்சமும் தலைவிரித்தாடியது - என்று ஒரு பேட்டியில் அண்ணாமலை கூறியிருக்கிறார்.**

**அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், “அண்ணாமலைக்கு, பல விஷயங்களில் வாய், நாக்கு நீளம், வாய்ச் சவடால்; அவரிடம் நாவடக்கம் இல்லை; அவர் கட்டுச் சோற்றில் கட்டின பெருச்சாளி மாதிரி நொய் நொய்ங்கிறார்” - என்று கண்டித்திருக்கிறார்.**

**“ஜெயலலிதாவின் ஆட்சியை தரக் குறைவாக அண்ணாமலை விமர்சித்திருப்பது, கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை என்ற பழமொழியைத்தான் நினைவு படுத்துகிறது” - என்று தாக்கி அறிக்கை வெளியிட்டுள்ளார் ஓ.பி.எஸ்.**

**“ஜெயக்குமார், நுனி மரக் கிளையில் அமர்ந்துகொண்டு, கிளையின் அடிப் பகுதியை வெட்டிக் கொண்டிருக்கின்றார். அண்ணாமலையை விமர்சித்தால், பாதிப்பு அ.தி.மு.க.வுக்குத்தான்” என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் பா.ஜ.க. மாநிலத் துணைத் தலைவர் கரு.நாகராஜன்.**

**இந்த மோதல்களுக்கிடையே, “உலகத்தையே விரல் நுனியில் எண்ணக்கூடிய எடப்பாடிக்குத்தான் பிரதமராகும் வாய்ப்பு உள்ளது” என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் பொன்னையனும்;**

**“ இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்கத் தகுதி வாய்ந்த ஒரே தலைவர் பழனிசாமிதான்” - என்று அ.தி.மு.க. எம்.பி. தம்பிதுரையும் ;**

கூறி, பா.ஜ.க. – அ.தி.மு.க. மோதலில் நிறைய நகைச்சுவையைக் கலந்திருக்கிறார்கள்.

## இந்தி மொழிக்கு முன்னுரிமை!

# நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் மன்னிப்புக் கோரியது!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் எதிரொலி!

மும்பை, ஜூன் 15 -

இந்தி மொழிக்கு முன்னுரிமை அளிக்கும் சுற்றறிக்கைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்திருந்த நிலையில், நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் மன்னிப்பு கோரியுள்ளது.

மும்பையை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பொதுத்துறை நிறுவனமான நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் தலைவர் நீரஜ் கபூர் சார்பில் ஊழியர்களுக்கு சுற்றறிக்கை ஒன்று அனுப்பப்பட்டது. அலுவலக நூலகங்களில் இந்தி மொழி தொடர்பான புத்தகங்களை மட்டுமே வைக்கவேண்டும், அலுவலகங்களில் இந்தி மொழி நாளிதழ்களை மட்டுமே வைக்கவேண்டும், இந்தி மொழி பேசி வேலை பார்ப்பவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கவேண்டும் என அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் இந்த சுற்றறிக்கைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார். இந்தி பேசாத மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதை சகித்துக்கொண்டிருக்கும் காலம் மலையேறி விட்டதாகவும், இந்தி திணிப்பை தி.மு.க. முழு மூச்சோடு எதிர்க்கும் என்றும் முதலமைச்சர் உறுதிபட தெரிவித்திருந்தார். நியூஇந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவன தலைவர் நீரஜ் கபூர் இந்த சுற்றறிக்கையை உடனடியாக திரும்பப் பெறுவதுடன் மன்னிப்பு கேட்கவேண்டும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், இந்தி திணிப்பை ஊக்குவிக்கும் வகையில் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையை திரும்பப் பெறுவதுடன், மன்னிப்பு கோருவதாகவும் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும், மாநில மொழிகள் மற்றும் கலாச்சாரத்தை மதிப்பதாகவும் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மாநில தலைமை தகவல் ஆணையராக

# ஓய்வு பெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி ஷகீல் அக்தர் நியமனம்!

### தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, ஜூன் 15-

தமிழ்நாடு மாநில தலைமை தகவல் ஆணையராக ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி ஷகீல் அக்தரை நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள், அலுவலகங்கள் மற்றும் திட்டங்கள் சார்ந்து பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதில் அளிப்பது தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் பணியாகும். அதிகாரமிக்க தலைமை தகவல் ஆணையர் மற்றும் நான்கு ஆணையர்களின் பதவிக் காலம் கடந்த நவம்பர் மாதம் நிறைவடைந்தது. இதனைத் தொடர்ந்து புதிய தலைமை தகவல் ஆணையர் மற்றும் ஆணையர்கள் பதவிக்கு தகுதியானவர்களை தேர்வு செய்வதற்கான தேடுதல்குழு ஓய்வு பெற்ற நீதிபதி அக்பர் அலி தலைமையில் அமைக்கப்பட்டது.

இக்குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இரண்டு முறை புதிய தலைமை தகவல் ஆணையரை தேர்வு செய்வது குறித்து ஆலோசனை நடைபெற்றது. இதில், ஓய்வு பெற்ற சி.பி.சி.ஐ.டி. டி.ஜி.பி. ஷகீல் அக்தரை தேர்வு செய்து பரிந்துரை கடிதம் ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. அந்த பரிந்துரையை ஏற்று தலைமை தகவல் ஆணையராக ஷகில் அக்தரை நியமித்து ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். ஓய்வு பெற்ற ஏ.டி.ஜி.பி. தாமரை கண்ணன், ஆர்.பிரியா குமார், டாக்டர் கே.திருமலைமுத்து, டாக்டர் எம். செல்வராஜ் ஆகிய 4 பேரும் தகவல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஜம்முவில் நிலநடுக்கம்

ஸ்ரீநகர், ஜூன் 15-

ஜம்முகாஷ்மீர் மாநிலம் மலைப்பகுதி மாவட்டங்களான தோடா மற்றும் கிஷ்த்வாரில் நேற்று முன்தினம் 5.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் பல கட்டிடங்கள் சேதம் அடைந்தன. இரண்டு பள்ளிக் குழந்தைகள் உள்பட ஐந்து பேர் காயம் அடைந்தனர். முன்னெச்சரிக்கை காரணமாக பள்ளிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று காலை அப்பகுதிகளில் மீண்டும் அடுத்தடுத்து நான்கு முறை நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். நிலஅதிர்வு ஏற்பட்ட இடங்கள் 1.நேற்று முன்தினம் காலை 8.29 மணியளவில் கிஷ்த்வாரில் 3.3 ரிக்டர் அளவில் நிலஅதிர்வு ஏற்பட்டுள்ளது 2.தோடாவில் 7.56 மணியளவில் நிலஅதிர்வு உணரப்பட்டுள்ளது.

## ஒன்றிய உள்துறை அமைச்சர்

# அமித்ஷா சொன்னது அனைத்தும் பொய்!

### சி.பி.ஐ. மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் குற்றச்சாட்டு!



ராஜபாளையம், ஜூன் 15-

‘அமித்ஷா சொன்னது அனைத்தும் பொய்’ என்று சிபி.ஐ. மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்து உள்ளார்.

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் நேற்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அமித்ஷா பேசும்போது காமராஜர், மூப்பனார் ஆகியோர் பிரதமராக வர இருந்த வாய்ப்பை தி.மு.க. தடுத்து நிறுத்தி விட்டதாக கூறியிருக்கிறார். ஆனால் காமராஜர் பிரதமராவதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. நேருவின் மறைவுக்குப் பிறகு லால்பகதூர் சாஸ்திரியும், அதன்பின் இந்திரா காந்தியும் பிரதமராக வருவதற்கு காமராஜர்தான் முழு பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதேபோல மூப்பனாரும் பிரதமராவதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. மாற்று அணியை உருவாக்குவதற்கே கவனம் செலுத்தினார். பிரதமராக அவருக்கு வாய்ப்பு இருந்தும் ஆர்வம் காட்டவில்லை. அவருக்கு இருந்த வாய்ப்பை தி.மு.க.வும் தடுக்கவில்லை.

கலைஞரை, குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட வலியுறுத்தியபோதும் அவர் அதை மறுத்துவிட்டார். உண்மை இவ்வாறு இருக்கும் நிலையில் அமித்ஷா தவறான தகவல்களை, பொய்யான தகவல்களை தமிழ்நாட்டில் கட்டவிழ்த்து விட்டு சென்றிருக்கிறார். வருங்காலத்தில் தமிழர் பிரதமராக வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். ஆனால் அந்த வாய்ப்பு வரும் தேர்தலில் இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மயிலாடுதுறை அருகே மது குடித்து இறந்த இருவரும் சயனைடு கலந்து கொலை!

### ஆட்சியர் மகாபாரதி தகவல்!

மயிலாடுதுறை,ஜூன் 15-

மயிலாடுதுறை அருகே மது குடித்து இறந்த இருவரும் சயனைடு கலந்து கொலை செய்யப்பட்டுள்ளனர் என ஆட்சியர் மகாபாரதி தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டம், தத்தங்குடி கிராமம், திருவாரூர் மெயின் ரோடு என்ற முகவரியில் வசித்து வந்த பழனி குருநாதன் (வயது 55) த.பெ. வேலாயுதம் மற்றும் தத்தங்குடி கிராம மஞ்சு நகர் பகுதியில் வசித்து வந்த பூராசாமி த.பெ. பாவாடை (வயது63) ஆகிய இருவரும் குத்தாலம் வட்டம், மங்கநல்லூர் கிராமம், திருவாரூர் மெயின் ரோட்டில் உள்ள பழனி குருநாதனுக்கு சொந்தமான கொல்லன் பட்டறையில் 12.06.2023 அன்று மாலை சுமார் 6.00 மணியளவில் இருவரும் மயங்கிய நிலையில் கிடந்ததை கண்டு அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் அவர்களை மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையில் அனுமதித்து மருத்துவர்களின் பரிசோதனைக்கு பின்பு இருவரும் இறந்து விட்டதாக மருத்துவரால் அறிவிக்கப்பட்டது.

இருவரும் மயங்கி கிடந்த கொல்லன் பட்டறையில் இருவருக்கும் அருகில் மதுப்பாட்டில்கள் இரண்டு கிடந்தன.

மேற்படி கொல்லன் பட்டறை இறந்து போன பழனி குருநாதன் என்பவரால் நடத்தப்பட்டு வந்தது. அதில் இறந்த மற்றொரு நபரான பூராசாமி கடந்த மூன்று மாதங்களாக பழனி குருநாதன் என்பவருடன் வேலை செய்து வந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பெரம்பூர் காவல் நிலையத்தில் குற்ற வழக்கு எண். 250/2023/US 174 CRPC நாள்12.06.2023-ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது. இறந்த இரு நபர்களின் பிரேதங்களும் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உடல் கூறு ஆய்வு (PM) செய்யப்பட்டது. மேலும் திருச்சி மண்டல தடயவியல் துறை, துணை இயக்குநர் அவர்களின் முதற்கட்ட பரிசோதனை அறிக்கையின் படி இறந்த இருவரது இரத்தம் மற்றும் உள்ளுறுப்புகளில் (VISCERAL) சயனைடு (CYANIDE) கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு பின்னணியில் பழனி குருநாதனின் சகோதரரான வே.மனோகரன் மற்றும் வே.பாஸ்கரன் (இருவரும் முதல் தாரத்தின் மகன்கள்) சொத்துத் தகராறு காரணமாக மதுவில் சயனைடு (CYANIDE) கலந்து கொலை செய்ய முயற்சித்துள்ளது கண்டறியப்பட்டு இருவரும் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு மேல் விசாரணை நடைபெற்று வருகிறது. உடற்கூராய்வு அறிக்கையில் சயனைடு(CYANIDE) கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து காவல்துறையினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.




புதுடெல்லியில் நேற்று முன்தினம் (13.06.2023) பேரிடர் மேலாண்மை குறித்து மாநில பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்கள் ஆய்வு கூட்டம் ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், ஆகியோர் கலந்து கொண்டனர்.